# திருக்குறள்

1. தன்னைத்தான் காக்கின் சினங்காக்க காவாக்கால்
   தன்னையே கொல்லுஞ் சினம்.

2. சினத்தைப் பொருளென்று கொண்டவன் கேடு
   நிலத்தறைந்தான் கைபிழையா தற்று.

3. உண்ணாது நோற்பார் பெரியர் பிறர்சொல்லும்
   இன்னாச்சொல் நோற்பாரின் பின்.

4. அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
   இகழ்வார்ப் பொறுத்தல் தலை.

5. மறத்தல் வெகுளியை யார்மாட்டும் தீய
   பிறத்தல் அதனான் வரும்.